26.02.2026
OS. No.23/2021
**பி.வா.சா.1 –** திரு.தண்டாயுதபாணி, த/பெ.மாரிமுத்து

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

என் தகப்பனார் வாதிகளின் தகப்பனாரிடம் இருந்து நெடுஞ்சாலை துறையிடம் இருந்து இழப்பீடு தொகையை பெறும் பொருட்டு இழப்பீட்டுத் தொகையைப் பெற்று விட்டு மீண்டும் பத்திரத்தை திருப்பி ஒப்படைப்பதாக கூறி பெற்றுக்கொண்டதாக சொல்லும் விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் பத்திரத்தை அவர்களிடமிருந்து வாங்கவில்லை. பத்திரம் எங்கள் வசம் தான் இருந்தது. தாவா சொத்து என்பது இரண்டு பத்திரங்கள் உள்ளடக்கியது ஆகும். அதில் ஒரு பத்திரம் வாதிகள் வசம் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.6 ஆகிய தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் 7 ¾ சென்ட் நில எடுப்பு செய்தது போக மீதம் உள்ள 22 ¼ சென்ட் பரப்பளவு இடம் எழுதிக் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். தாவாவில் கண்ட சொத்து மொத்தம் 60 சென்ட் என்று சொன்னால் சரிதான். மொத்தம் உள்ள 60 சென்டில் 30 சென்டில் நிலம் எடுத்தது போக 22 ¼ சென்ட் தான் எனக்கு ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்பதும் மீதமுள்ள 30 சென்ட் இடத்தை பொறுத்து எனக்கு சம்பந்தம் கிடையாது என்றால் சரிதான். மீதம் உள்ள 30 சென்ட் இடத்திற்கு உரிய பத்திரம் வாதிகள் வசம்தான் இருக்கிறது என்றால் சரியல்ல. 7 ¾ சென்ட் நில எடுப்பு செய்தது போக மீதம் உள்ள 22 ¼ சென்ட்

பரப்பளவு இடத்தில் வாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் இல்லை. வாதிகள் தகப்பனார் உயிருடன் இருந்த காலம் வரை என்னுடைய தகப்பனாரிடம் வந்து தாவா சொத்தை கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் கிரயம் செய்து கொடுக்க வேண்டும் என்று கூறிய விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் அப்படி ஒன்று நடக்கவில்லை. வாதிகளின் தகப்பனார் இறந்த பிறகு வாதிகள் என்னுடைய தகப்பனாரிடம் கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் கிரையம் செய்து கொடுக்குமாறு பலமுறை கேட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் அவ்வாறு ஒன்று நடைபெறவில்லை. என் தகப்பனார் எல்லா விவரங்களையும் என்னிடம் தெரிவிப்பார் என்பதாலும் எங்கு சென்றாலும் என்னை தான் அழைத்துச் செல்வார் என்பதாலும் அனைத்து விபரங்களும் எனக்கு நேரடியாகவே தெரியும். எனக்கு அனைத்து விபரங்களும் தெரியும் என்று வழக்கிற்காக பொய்யாகச் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளின் வசம் வா.சா.ஆ.1 உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் ரூபாய் 5000 பணம் கடனாக வாங்கிய காலத்தில் பொறுப்புக்காக அந்த ஆவணம் ஒப்படைக்கப்பட்டு இருந்தது. என் தகப்பனார் ரூபாய் 5000 1989 ஆம் வருடத்தில் கடனாக வாங்கினார். தேதி நினைவில்லை. அதற்கு பொறுப்புறுதிக்காக என் தகப்பனார் அசல் ஆவணம் கொடுத்திருந்தார். மேலும் நிரப்பப்படாத முத்திரைத்தாளிலும் கையொப்பம் செய்து கொடுத்திருந்தார். வாதிகள் தங்கள் வழக்கறிஞரின் மூலமாக 2020 ஆம் வருடம் எங்கள் தகப்பனாருக்கு அறிவிப்பு அனுப்பிய விபரம் எனக்கு நேரடியாக தெரியும். அந்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நாங்கள் பதில் எதுவும் கொடுக்கவில்லை

என்று சொன்னால் சரிதான். கொரோனா பெருந்தொற்று காரணமாக நானும், என் தகப்பனாரும் பாதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்ததை காண்பிக்கக்கூடிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வாதிகளின் தகப்பனாரிடம் ரூபாய் 5000 கடன் வாங்கியதாக கூறியதற்கு பொறுப்புறுதிக்காக கொடுத்த அசல் ஆவணத்தை திரும்ப பெற சட்ட நடவடிக்கை ஏதாவது எடுத்தேனா என்றால் இதுவரை இல்லை. அசல் ஆவணங்களை திரும்ப ஒப்படைக்குமாறு வாதிகளின் தகப்பனாரிடமும் வாதிகளிடமும் நாங்கள் பலமுறை கேட்டதாக கூறும் விபரத்தை என்னுடைய எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றும் அது முற்றிலும் குறிப்பிடாத புதிய சங்கதி என்றால் சரியல்ல. நெடுஞ்சாலை துறையினரால் நில எடுப்பு செய்யப்பட்ட பிறகு உள் வட்டச் சாலை அமைக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். அவ்வாறு சாலை அமைக்கப்பட்டது 2015 அல்லது 2016 ஆம் வருடம் என்று சொன்னால் சரிதான். வாதிகள் தாவா சொத்தை சேதப்படுத்தியது குறித்து காவல் நிலையத்திலோ அல்லது நீதிமன்றத்திலோ சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. வாதிகள் தற்போது வரை மிரட்டி வருகிறார்கள். வாதிகள் மிரட்டியது தொடர்பாக காவல் உதவி எண் 100–க்கு நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து பார்வையிட எனக்கு ஆட்சேபனை இல்லை. கொரோனா பெருந்தொற்றால் எந்த வருடம் எந்த மாதம் நானும் என் தகப்பனாரும் பாதிப்புக்கு உள்ளானோமென்றால் மாதம் வருடம் தெரியாது. அந்த காலகட்டத்தில் தான் நான் கூலி தொழிலாளர்களை வைத்து கம்பி வேலி

அமைத்ததாக கூறி இருக்கிறேன் என்றால் சரிதான். அவ்வாறு கம்பி வேலி அமைத்ததாக கூறுவதை நிரூபணம் செய்வதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தில் வழக்கறிஞர் அறிவிப்பு பலகை ஒன்று உள்ளது. அந்த அறிவிப்பு பலகையை வாதிகள் வைத்திருக்கிறார்கள் என்றால் யார் வைத்தார்கள் என்று எனக்குத் தெரியாது. அந்த அறிவிப்பு பலகையில் இந்த இடத்தில் யாரும் அத்துமீறி பிரவேசிக்க கூடாது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்றால் சரிதான். நாங்கள் கூறுவது போல் ரூபாய் 5000 பணத்திற்காக என் தகப்பனார் நிரப்பப்படாத முத்திரைத்தாளிலும் கையொப்பம் செய்திருக்க மாட்டார் என்றும் அசல் ஆவணங்களையும் கொடுத்திருக்க மாட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த ஆவணமானது கிரையம் செய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு ரூபாய் 11,400 பெற்றுக்கொண்டு எழுதிக் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. கிரைய ஒப்பந்த ஆவணத்தில் இருக்கக்கூடிய கையொப்பம் என் தகப்பனாரின் கையொப்பம் என்று சொன்னால் அவ்வாறு ஒரு ஆவணமே என் தகப்பனார் எழுதிக் கொடுத்தது இல்லை. கையெழுத்து நிபுணர் அறிக்கையை பெறுவதற்கு நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆகியவற்றில் உள்ள கையொப்பங்கள் என்னுடைய தகப்பனாருடைய கையொப்பம் இல்லை. என் தகப்பனார் வாதிகளின் தகப்பனாருக்கு என்ன பத்திரம் கொடுத்தார் என்ன ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு எதுவும் தெரியாது என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன்

என்றால் சரியல்ல. 1989 ஆம் வருடத்தில் இருந்து தற்போது வரை அனுபவம் செய்து வருவதை காண்பிக்க கூடிய பசலி ரசீதுகள் தாக்கல் செய்து இருக்கிறேனா என்றால் இல்லை. அவர்கள் தாக்கல் செய்த ரசீதுகள் போலியானது ஆகும். அதில் தமிழக அரசின் உண்மையான கோபுர முத்திரை இல்லை. 1989 ஆம் வருடத்தில் இருந்து வாதிகளின் தகப்பனார் அனுபவம் செய்து வந்தார் என்றும் அவர் காலம் சென்ற பிறகு வாதிகள் தற்போது சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தின்படி வாதிகளுக்கு அவர்கள் வழக்குரையில் கேட்டிருக்கக்கூடியவாறு ஆவணம் எழுதிக் கொடுக்க கடமைப்பட்டு இருக்கிறேன் என்றும் வாதிகள் கேட்டிருக்கக்கூடிய பரிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதாக இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Web Copy